# பத்திரிக்கைச் செய்தி

## காலிமனைக்கு வரி நிர்ணயம் செய்ய ரூ.5,000/- லஞ்சம் கேட்டு பெற்று வாங்கிய பில்கலெக்டர் கைது

புகார்தாரர் திரு.நாகராஜன், தீரன் நகர், திருச்சி, அவர்கள் தன்னுடைய தாயார் பெயரில் திருச்சி சுப்பிரமணியபுரத்தில் உள்ள 1200 சதுரடி கொண்ட காலிமனையில் வீடு கட்டுவதற்கு காலிமனை வரி நிர்ணயம் செய்ய கடந்த 14.08.2023 அன்று திருச்சி மாநகராட்சி 48வது வார்டு வரி வசூல் மைய பில் கலெக்டர் திரு.ராஜலிங்கத்தை சந்தித்து விபரம் கேட்க, அவர் அது தொடர்பான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து, ஆவணங்களை இணைத்து தன்னை வந்து சந்திக்குமாறு கூறியுள்ளார். பின் கடந்த 23.08.2023 அன்று சுப்பிரமணியபுரத்தில் உள்ள திருச்சி 48வது வார்டு வரி வசூல் மையத்தில் வைத்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை திரு.ராஜலிங்கம், பில் கலெக்டர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார். திரு.ராஜலிங்கம், பில் கலெக்டர், காலிமனைக்கு வரி நிர்ணயம் செய்து கொடுக்க தனக்கு லஞ்சமாக ரூ.7000/- கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். பின்னர் புகார்தாரர் திரு.நாகராஜன் கேட்டுக்கொண்டதின் பேரில் லஞ்ச லஞ்ச பணத்தை ரூ.7,000/-லிருந்து ரூ.2,000/- குறைத்து ரூ.5,000/- கொடுத்தால் மட்டுமே உங்களது காலிமனைக்கு வரி நிர்ணயம் செய்து கொடுக்க முடியும் என்று வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருச்சி பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 25.08.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராஜலிங்கம், பில் கலெக்டர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.5,000/-யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். மேலும் திரு.ராஜலிங்கத்திடம் சோதனை செய்தபோது கணக்கில் காட்டப்படாத ரொக்கம் ரூ.25,000/- கைப்பற்றப்பட்டது.